**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> :** செல்வி.சே.தா.ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2024 -ம் ஆண்டு ஜனவரி திங்கள் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை

<u>அசல் வழக்கு எண்.54/2016</u>

**<u>OST/0200054/2016</u>**

1. கே.வசந்தா.
2. மலர்மண்ணன்.
3. சந்திரசேகர்.
4. சிலம்பரசன் ... வாதிகள்

/எதிர்/

1. டி.முனியம்மாள்,
2. கே.மூர்த்தி.
3. கே.பெருமாள்.
4. டி.சாந்தி.
5. டி.மணிகண்டன்.
6. டி.ரேவதி.
7. ஜி.திருவேங்கடம்.
8. ஜோதி (எ) சின்னப்பையன்.
9. கதிர்வேல்.
10. மயில்வேல்.
11. லீலாகுமாரி.
12. வி.நாகராஜன்.
13. பு.மகேந்திரகுமார்.
14. இணை சார்பதிவாளர்-2,
    இணை சார்பதிவாளர்-2 அலுவலகம்,
    திருவத்திபுரம், செய்யாறு.

...பிரதிவாதிகள்.

இவ்வழக்கு என்முன்பாக 05.01.2024 தேதியன்று விசாரணைக்காக வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.P.சரவணன், அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.U.அரிகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 11, 12ம் பிரதிவாதிகள் தரப்பில் திரு.K.விஸ்வநாதன் அவர்கள் ஆஜராகியும், 3, 8, 9, 10, 11, 12, 13, 14 பிரதிவாதிகளை ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இதுகுறித்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா ஏ மற்றும் சி அட்டவணையிலிட்ட சொத்துக்களில் இருந்தும், தாவா பி அட்டவணையிலிட்ட 9 முதல் 23 அயிட்ட சொத்துக்களில் இருந்தும், வாதிகளுக்குண்டான தலா 1/8 பாகத்தினை 1 முதல் 6 பிரதிவாதிகள் பிரித்தளிக்க வேண்டியும், தாவா பி அட்டவணையிலிட்டுள்ள 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களிலிருந்து வாதிகளுக்குண்டான தலா 1/8 பாகத்தினை 12, 13 பிரதிவாதிகள் பிரித்தளிக்க வேண்டியும், தாவா பி அட்டவணையிலிட்டுள்ள 7 மற்றும் 8 அயிட்ட சொத்துக்களிலிருந்து வாதிகளுக்குண்டான தலா 1/8 பாகத்தினை 1 முதல் 7 பிரதிவாதிகள் பிரித்தளிக்க வேண்டியும் ஒரு முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், தாவா ஏ மற்றும் சி அட்டவணையிலிட்ட சொத்துக்கள் குறித்தும், தாவா பி அட்டவணையிலிட்ட 9 முதல் 23 அயிட்ட சொத்துக்கள் குறித்தும், 1 முதல் 6 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, தாவா பி அட்டவணையிலிட்டுள்ள 1 முதல் 6 அயிட்ட சொத்துக்கள் குறித்து, 12, 13 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, தாவா பி அட்டவணையிலிட்டுள்ள 7 மற்றும் 8 அயிட்ட சொத்துக்கள் குறித்து 1 முதல் 7 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ விற்பனையோ அல்லது வில்லங்கமோ ஏற்படுத்துகின்ற வகையில் ஏதாவது ஒரு தவறான ஆவணங்களை உருவாக்கி அதனை பதிவு செய்வதற்காக 14-ம் பிரதிவாதியை அணுகும்பட்சத்தில் அதனை 14-ம் பிரதிவாதி பத்திரப்பதிவு செய்யக்கூடாது என ஒரு நிரந்தர தடையுத்தரவு பிறப்பிக்கக் கோரியும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்குண்டான பாகத்தினை பிரித்து அதனை 1 முதல் 7 மற்றும் 12, 13 பிரதிவாதிகள் வாதிகளிடம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பித்தும், தவறும் பட்சத்தில் கனம் கோர்ட்டார் அவர்கள் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்துக்களை ஈடுதாழ்த்தி நிலம் தகிடு, தரம் பார்த்து வாதிகளுக்கு உண்டான தாவா ஏ, பி, சி, அட்டவணையிலிட்டுள்ள சொத்துக்களில் 1/8 பாகத்தினையும் பிரித்தளிக்க முதல்நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் ஒரு இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடக் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இன்று வாதி ஆஜர். 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 7ம் பிரதிவாதி ஆஜர். இரண்டாவது முறையாக அழைக்கப்பட்டபோது வாதி ஆஜர். வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. மூன்றாவது முறையாக அழைக்கப்பட்டபோது வாதி ஆஜர். வாதியின் வழக்கறிஞர் வெளியூர் சென்று உள்ளார் என்று கூறினார். வழக்கு கோப்புகளை ஆராய்ந்ததில், வாதிகளுக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டும், இன்று வாதியை அழைத்தும் ஆஜரில்லை. 19.12.2023 முதல் வாதி தரப்பு வாதத்திற்காக நிலுவையில் இருந்து வருகினறது. வாதிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கினை மேல் நடத்த எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த வழக்கானது 2016ம் வருடத்திய வழக்காகும். வாதிக்கு வழக்கை நடத்த விருப்பமில்லை என தெரியவருகிறது. எனவே, இவ்வழக்கு செய்யத்தக்க செய்யாமைக்காக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

2024-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 05-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) சே.தா.ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.